# விலங்கு விசர் நோய்
## (RABIES)

சில குறிப்புகளும்
தடுக்கும் முறைகளும்

வெளியீடு

சுகாதார கல்விசார்
பொருட்கள் தயாரிப்பு அலகு
சமுதாய மருத்துவத் துறை
மருத்துவ பீடம்
யாழ் பல்கலைக்கழகம்

வெளியீடு இல: 92 / 01
ஜுலை 92

## விலங்கு விசர் நோய் வராது தடுக்கும் முறைகள் எவை?

1. இது பெரும்பாலும் நாய்களுக்கு உண்டாகும் நோய். ஆகவே நாய்களுக்கு இந்நோய் வராது தடுக்க முடியுமானால் இந்நோய் மனிதனுக்குப் பரவாது தடுக்க முடியும். நாய்களுக்கு வருடாவருடம் ஒழுங்காகத் தடை ஊசி போடுவதன் மூலம் நாய்களுக்கு இந்நோய் வாராது தடுக்க முடியும்.

2. தடை ஊசி போட முடியாத, உரிமையாளர்கள் இல்லாத சகல நாய்களையும் அழிக்க வேண்டும்.

3. நாய் கடித்தால் தக்க முதலுதவி அளிக்க வேண்டும்.

4. கடித்த நாய்க்கு விலங்கு விசர் உண்டு என்று சந்தேகித்தால் விசர் நாய்க்கடி நோய் தடை ஊசி (A.R.V.) உடனே போட ஆரம்பிக்க வேண்டும்.

5. தடை ஊசி (A.R.V.) முழுமையாக போடப்படல் வேண்டும்.

**விசர்நாய்களை எவ்வாறு இனம் காணலாம்?**

i) நடத்தையில் மாற்றம் காணப்படல்

ii) இருண்ட மூலைகளில் ஒதுங்குதல்

iii) திடீரெனத் தாக்குதல்

iv) வித்தியாசமாகக் குரைத்தல்

v) கண்கள் சிவந்து இருத்தல்

vi) முகம் வீங் இருத்தல்கி

vii) அதிக அளவு உமிழ்நீர் சுரத்தல்

viii) விழுங்குவதில் சிரமம் இருத்தல்

ix) உணவை வெறுத்தல்

x) குறிக்கோள் இன்றி ஓடித் திரிதல்

xi) கால்களும், வாலும் சேர்ந்து காணப்படுதல்

மேற் குறிப்பிட்ட அறிகுறிகளில் ஒன்றோ அல்லது பலவோ இருப்பின் விசர்நாய் என இனங்காணலாம்.

## நாய் கடித்தால் செய்ய வேண்டிய முதல் உதவி என்ன?

1. காயப்பட்ட பகுதியை (காயம் உட்பட) நன்றாகச் சவர்க்காரம் போட்டு உடனே நன்கு கழுவ வேண்டும். கழுவத் தாமதித்தால் கிருமிகள் காயத்துள் சென்று விடும்.

2. ஈரத்தைத் துடைத்துவிட வேண்டும்.

3. இயலுமாயின் வைரஸ்சை அழிக்கும் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படும் 40—70% மதுசாரம் அல்லது 0.01% அயடீன் கரைசல் கொண்டு காயத்தை நனைத்தல் வேண்டும்.

4. காயத்தை சுத்தமான துணியால் கட்டி காயப்பட்டவரை வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டும்.

5. கடித்த நாயை 10 நாட்களுக்கு கட்டி வைத்து அவதானிக்கவும். நாயில் ஏதாவது வித்தியாசமான குணாதிசயங்கள் தோன்றினால், வைத்தியரிடம் சொல்ல வேண்டும்.

குறிப்புகள்:

- இந்நோய்க்கான அறிகுறிகள் மனிதனில் நாய் கடித்ததில் இருந்து 9 நாட்கள் முதல் பல மாதங்களின் பின்பும் தோன்றலாம்.

- அறிகுறிகள் தோன்றும் காலம் கடிபட்ட இடத்திலும், காயத்தின் தன்மையிலும் தங்கியுள்ளது.

  கடிபட்ட இடம் மத்திய நரம்பு மண்டலத்திற்கு அருகாமையிலாயின. அறிகுறிகள் விரைவில் தோன்றும்.



அருண் பிறிண்டேர்ஸ் அன்ட் பப்ளிஷேர்ஸ்
யாழ்ப்பாணம்.

## விலங்கு விசர் என்றால் என்ன?

விலங்கு விசர், மிருகங்கட்கு ஏற்படும் ஒரு நோய். எமது பகுதிகளில் இது பொதுவாக நாய்களுக்கு உண்டாகும். இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு நாய், மனிதனைக் கடித்தால், நாயின் உமிழ்நீரில் உள்ள நாய் விசருக்குக் காரணியான வைரஸ் கிருமி, காயத்தின் ஊடாக மனிதனின் உடலுக்குள் செலுத்தப்பட்டு விடும். இவ்வைரஸ் பிரதானமாக மத்திய நரம்பு மண்டலத்தையும், உமிழ்நீர்ச் சுரப்பியையும் பாதிக்கின்றது.

விலங்கு விசர் நோய் ஒருவருக்கு உண்டாகினால் அதற்குச் சிகிச்சை கிடையாது.

ஆகவே, இந்நோய் வராது தடுப்பது மிக அவசியம்.